# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS No. 22 /2024

dated : 23.09.2025

P.W. 2

Name : வெள்ளத்தாய்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை :**

நான் பாம்புகோவில் சந்தை என்ற ஊரில் வசித்து வருகிறேன். மேற்படி முகவரியில் வசிக்கிறேன் என்று கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு 20 வயதுக்கு முன்பாக திருமணமாகிவிட்டது. திருமணமான பின்பு பாம்புகோவில் சந்தையில் சிறிது நாட்களும், பின்னர் சென்னையில் குடியிருந்தோம். அவ்வவ்போது ஊருக்கு வந்து செல்வோம். சென்னையில் பல்லாவரத்தில் வாடகை வீட்டில் தான் குடியிருந்தோம். நான் சென்னைக்கு சென்ற சிறிது நாட்களில் என் தம்பி அங்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் கணவர் 1991ல் இறந்து பின் அவர் அங்கு வந்தார். என் அப்பா 30.03.2005ம் தேதியில் இறந்தார் என்றால் சரிதான். என் தம்பிக்கு இரண்டு மக்கள். 3 , 4 வாதிகள் அவரது மக்கள் ஆவார்கள். என் அப்பா இறக்கும்போது என் தம்பியின் மக்கள் சிறுவர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு விபரம் அறியாதவர்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்கு 5, 6 வயது இருக்கும். எனக்கும், பிரதிவாதிக்கும் 2023ம் பிரச்சனை ஏற்பட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளும்படி கூறிவிட்டார்கள். வழக்கில் எவ்வளவு சொத்துக்கள், குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. இடத்தை கூறினால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். பாம்புகோவில் சந்தை ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள இடம் பொது இடமாகும். புகைப்படத்தில் கல்தூண் நட்டி வேலி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு பகுதி வேலி போடாமல் சோளப்பயிர் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பிரதிவாதிதான் பயிர் செய்துள்ளார். நாங்கள் பாடுபட்ட இடம் தரிசாக உள்ளது. குருசாமி இடத்தில் சோளம் உள்ளது. புகைப்படங்கள் ஆட்சேபணையுடன குறியீடு செய்யப்படுகிறது. அது பி.வா.சா.ஆ-1 ஆகும். என் தந்தை இறந்த 6 வருடங்கள் கழித்து என் அம்மாவும் இறந்து போனார். நான் ஊருக்கு வரும்போது பிரதிவாதியின் வீட்டில் தங்கியிருப்பேன் என்றால் சரிதான். அது பொது வீடு ஆகும். புகார் கொடுத்த

பின்னர்தான் பிரதிவாதியுடன் பேச்சு வார்த்தை இல்லை என்றாலும், அவர் வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும் சரிதான். சொக்கம்பட்டியில் நான்தான் புகார் கொடுத்தேன். பின்னர் புளியங்குடி டிஎஸ்பி அலுவலகத்திலும் விசாரித்தார்கள். மேற்படி விபரங்களை இவ்வழக்கில் கூறியுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின் பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை விபரங்களை யாரிடம் காட்டி படித்து தெரிந்து கொள்ளவில்லை. நான் அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பின்னர்தான் நான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தேன். செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த பின்னர்தான், இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு விபரங்கள் சொன்னது நான்தான். இவ்வழக்கில் எந்தெந்த சொத்து, எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு சரியாக தெரியாது. என் அம்மா பிரதிவாதியின் வீட்டில் வைத்து இறந்துபோனார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு என் அம்மா இறந்த வீடு என்றால் சரிதான். 2005 ம் ஆண்டிற்கு பின்னர் அந்த வீடு தற்போது யார் பெயரில் பதிவாகியுள்ளது என்று எனக்கு தெரியாது. என் தாயார் இறந்த வீடு என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு தான், அந்த வீடு பி.வா.சா.ஆ-2. ( ஆட்சேபணையுடன குறியீடு செய்யப்படுகிறது. ) அந்த வீடு பால்காய்ச்சிய விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மகள் பூப்புனித விழாவிற்கு இந்த வீட்டிற்கு வந்தேன், பி.வா.சா.ஆ-2 ன் வீட்டிற்குதான் வந்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இடம் தொழுவம் ஆகும். அது பி.வா.சா.ஆ.3 ( ஆட்சேபணையுடன குறியீடு செய்யப்படுகிறது. ) , அதை பிரதிவாதியின் பயன்படுத்தி வருகிறார் என்றால் சரிதான். என் தந்தை இறந்து 16 ம் நாளில் ஊர் நாட்டாண்மை முன்னிலையில் சமரசம் பேசி எங்களுக்கு தனியே இடம் ஒதுக்கி நாங்கள் அதை அனுபவத்து வருகிறோம் என்றால் சரியல்ல. தற்போது சொத்துக்களின் மதிப்பு உயர்ந்து விட்டதால், தற்போது கூடுதல் சொத்து கேட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. 2005 ம் ஆண்டிலேயே பாகம் பிரிவினை செய்து கொணட் சொத்துக்களை மீண்டும் பாக பிரிவினை செய்து கொள்ள உரிமையில்லை என்றால் சரியல்ல. நானும், 2 ம் வாதியும் பிரதிவாதியை கட்டாயப்படுத்தி ஆவணம் எழுதி பெற முயற்சித்தோம் என்றால் சரியல்ல. அது பலன் அளிக்காததால் மோசடியாக எங்கள் பிள்ளைகள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தோம் என்றால் சரியல்ல. எனக்கு திருமணமான பின்னர் 2 ம் வாதி என்னுடன் சென்னைக்கு வந்து, எங்களுடேனே வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், 2 ம் வாதிக்கும் ஆதார் அட்டை, குடும்ப அட்டை சென்னை முகவரியில்தான் உள்ளது. நானும் , 2 ம்

வாதியும் பாம்புகோவில் சந்தைக்கு வந்து சொத்துக்களில் விவசாயம் செய்ததும் இல்லை என்றும், அனுபவித்தும் இல்லை என்றும் சொன்னால் என்றால் சரியல்ல. நானும், 2 ம் வாதியும் பிரதிவாதியும் பாகப்பரிவினை செய்து, தனித்தனியே அனுபவித்து வருவதை கூறி பிரதிவாதி அறிவிப்பு அனுப்பிய பின்னர்தான் நாங்கள் மோசடியாக செட்டில்மெண்ட் ஆவணம் எழுதினோம் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்துக்கள் முழுமையாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், 1, 3 தபசில் சொத்துக்களில் எனக்கும், 2 ம் வாதிக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தற்போதும் தனியே இருந்து வருகிறது என்றும், பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர் அனுபவத்து வருகிறார் என்றால் சரியல்ல. 1, 3 தபசில் சொத்துக்கள் வருவாய் துறை ஆவணங்ளில் பெயர் மாற்றம் ஏற்படாததை காரணமாக கொண்டு எங்களுக்கும் பங்கு இருப்பதாக வீண் பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பொது அனுபவத்தில் இல்லாத சொத்தை கூட்டு அனுபவத்தில் இருப்பதாக தவறாக கூறி, செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் தவறு என்றால் சரியல்ல. என்னுடை ய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.23 18:05:29 +0530